**14.07.2026.**

**Spl.C.C.No.2 of 2025** (Spl.C.C.No. 4 of 2020 - CJM, Vellore)

P.W. 16 - Thiru.Vijay

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு விரிவான விசாரணை ஆய்வாளர் திரு. ரஜினிகாந்த் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. அவரும் விசாரணையில் ஒரு பகுதியில் ஈடுப்பட்டாரா என்றால் விசாரணை செய்தார். அவருக்கு பின்னர் தான் ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்கள் மேற்கொண்டு அந்த விசாரணையை தொடர்ந்தார். விரிவான விசாரணையின் போது ஆவணங்களை கைப்பற்றலாம் சாட்சிகளையும் விசாரணை செய்யலாம் என்றால் சாட்சிகளை விசாரணை செய்யலாம் ஆனால் பொதுவாக அசல் ஆவணங்களை கைப்பற்றுதில்லை.

ஆவணங்களின் நகல்களை கைப்பற்றி விசாரணை செய்வீர்களா என்றால் அந்தந்த வழக்கிற்கு ஏற்றவாறு. இந்த வழக்கில் கைப்பற்றி விசாரணை செய்தேனா என்றால் விரிவான விசாரணையின் போது நகல் பெற்று விசாரணை செய்யப்பட்டது.

விரிவான விசாரணையின் போது விசாரணை செய்யப்பட்ட கோப்பு திரு.அசோகன் ஆய்வாளர் என்னிடம் ஆஜர்ப்படுத்தினாரா

என்றால் ஆஜர்ப்படுத்தினார். விரிவான விசாரணை சம்மந்தப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் போர்வெல் அமைக்க மற்றும் சிமெண்ட் சாலை போடுவதற்கு உண்மையான டெண்டர் கோராமல் என்று என் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். டெண்டர் கோரப்பட்ட அன்று மேற்கண்ட 2 டெண்டர் மட்டும் அல்லாமல் அன்றைய தினம் போர்வெல் அமைக்க மொத்தம் 62 டெண்டர்களும் சாலைகள் போட மொத்தம் 65 டெண்டர்களும் கோரப்பட்டது என்றால் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத விஷயம் என்பதால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

நான் சொல்லும் முனுசாமி, பாஸ்கர் மற்றும் சரவணகுமார் ஆகியோர்கள் அன்றைய தினம் எத்தனை டெண்டரில் கலந்துகொண்டார்கள் என்று தெரியுமா என்றால் அது குறித்து விசாரிக்கவில்லை. பாஸ்கர் என்பவர் மொத்தம் 7 டெண்டர்களிலும் சரவணகுமார் மொத்தம் 6 டெண்டர்களிலும் அன்றைய தினம் கலந்து கொண்டார்கள் என்றால் இவ்வழக்கிற்கு தொடர்பற்ற விவரம் என்பதால் எனக்கு தெரியவில்லை.

சரவணகுமார் என்பவர் 6 டெண்டர்களுக்கும் பாஸ்கர் என்பவர் 7 டெண்டர்களுக்கும் EMD தொகையை திரும்பப் பெற்றுள்ளார்கள்

என்றும் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட EMD உட்பட திரும்பப் பெற்றுள்ளனர் என்றால் அவ்வாறான ஆவணம் ஏதுமில்லை.

ஆய்வாளர் அசோகன் என்பவர் அழ்துளை கிணற்றை அளந்து அவ்விடத்திலேயே செயல்முளை ஒன்றை தயார் செய்து கையொப்பம் பெறப்பட்டுள்ள வழக்கை என்னிடம் கொடுத்ததாக ஆய்வாளர் அசோகன் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் அளக்கும்போது நேரடியாக போனேனா என்றால் இல்லை.

Sanction வழங்கிய அதிகாரிகள் கொடுத்த வாக்குமூலத்தில் நான் அவர்களிடம் நேரில் ஆஜராகி வழக்கு பற்றி தெளிவுப்படுத்தியதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். ஆனால் அவரின் Sanction order ல் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

நான் நேரில் சென்று தெளிவுப்படுத்தியதாக ராமன் IAS அவர்களை விசாரிக்காமலேயே நானாகவே 161 வாக்குமூலத்தில் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

BDO க்களை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் ஊராக வளர்ச்சி துறை இயக்குநருக்கு தான் உள்ளது என்றால் சரியல்ல மாவட்ட ஆட்சியருக்கு உள்ளது. மாவட்ட ஆட்சியருக்கு பணியிடை நீக்கம் செய்ய மட்டும் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. ஊழல் தடுப்பு சட்டம் 19 ன் கீழ் யாருக்கு நீக்கம் அதிகாரம் உள்ளதோ அவர் தான் இசைவு ஆணை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. Appointing

authority என்று தான் சட்டப்பரிவில் உள்ளது.

யாருக்கு remove செய்யும் அதிகாரம் உள்ளதோ அவர் தான் இசைவு ஆணை வழங்க வேண்டும் என்றால் சரிதான். அந்த வகையில் இயக்குநர், ஊராக வளர்ச்சி துறை அவர்களுக்கு தான் இசைவு ஆணை வழங்க அதிகாரம் உள்ளது என்றால் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு இசைவு ஆணை அவர் வழங்கும் அதிகாரம் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் அவருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றும் அதனால் நான் வாங்கிய இசைவு ஆணை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

போர்வெல் அமைக்கும் வழக்கில் ரூ.43,350/- கையாடல் செய்ததாக சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த தொகை 174 மீட்டர் போர் போடுவதற்காக ஏற்படும் செலவு தொகை என்றால் சரிதான்.

கை பம்பு இருந்தபோது 83 அடி ஆழம் என்றால் சரிதான். ஒன்றிய பொருளாளர் திரு.குகன் என்பவர் அளந்தபோது 84 மீட்டர் ஆழம் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். திரு. ராமன் Geologist அவர்கள் அளக்கும்போது 90.6 மீட்டர் ஆழம் இருந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் 83 அடியிலிருந்து மேற்கொண்டு அவ்வளவு ஆழம் போர் எப்போது போடப்பட்டது குறித்து விசாரணை செய்தேனா என்றால் கோயில் தெருவில் உள்ள போர்வெல்லின் ஆழம்

தான் 83 அடி என்று சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட போர்வெல் பொறுத்தவரையில் ரோஜாபாய் வீட்டிற்கு எதிரில் உள்ள போர்வெல் ஆகும். அதனால் 83 அடி ஆழம் கொண்டதாக சொல்லப்படும் கை பம்பிற்கும் ரோஜாபாய் வீட்டிற்கு எதிரே உள்ள போர்வெல்லுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. கோயில் தெருவில் வேறு போர்வெல் உள்ளதா என்றால் உள்ளது.

ரோஜாபாய் வீட்டிற்கு எதிரில் இருந்தது தான் 83 அடி கை பம்பு என்றும் அதை தான் ஆழப்படுத்தி மோட்டார் பொறுத்தி சின்டென்ஸ் டாங்க் கட்டி நீர் விநியோகம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் ஏற்கனவே போனவர் கொடுத்த அறிக்கையை வைத்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை பார்வையிட்டு நான் எந்த பார்வை மகசரும் தயார் செய்யவில்லை. நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, சாட்சிகளை விசாரித்தேன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

நான் என் முதன்மை சாட்சியத்தில் சாட்சிகளை விசாரித்தேன் ஆனால் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்று சொல்லாத நிலையில் குறுக்கு விசாரணையில் சாட்சிகளை விசாரித்ததாகவும் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ. 23 ஆவணத்தை யார் கைப்பற்றியது என்றால் புலன் விசாரணை அதிகாரி திரு.அசோகன் அவர்களால் கைப்பற்றப்பட்டது. போர்வெல் போடும் வேலையை பொறுத்தவரையில் யூனியன் fund லிருந்து செய்யப்படும் வேலை என்றால் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவு செய்ய கூடிய பணி. சாலை அமைப்பது பொறுத்தவரையில் தாய் திட்டத்தின் கீழ் செய்ய கூடிய பணி. அந்த 2 வேலைகளும் ஊராட்சி ஒன்றியம் மூலமாக செய்யும் வேலை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் செய்யும் வேலை.

பஞ்சாயத்து allotment Register ல் இது குறித்து பதிவு வராது என்றால் சரியல்ல. நிச்சயமாக அதில் பதிவு செய்யப்பட வேண்டும். நான் சொல்வது தவறு என்றும் ஊராட்சி நிதி செலவு செய்தால் தான் பஞ்சாயத்து allotment register ல் பதிவு செய்வது கட்டாயம் என்று சொன்னால் சரியல்ல.

பஞ்சாயத்து செயலாளரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. திரு. அசோகன் அவர்கள் சாட்சி லதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

ரட்சைய தெருவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாலை 10.09.2012 வரை அமைக்கப்படவில்லை என்பது குறித்து தீர்மான புத்தகம் பொருள் எண்.89 நாள் 10.09.2012 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரட்சைய தெருவின் மொத்த நீளம் எவ்வளவு என்றால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை. அந்த தெருவில் ஏற்கனவே 75 மீட்டர் சிமெண்ட் சாலை இருந்தது என்றும் 82 மீட்டர் மண் சாலை இருந்தது என்று சொன்னால் அவ்வாறான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் இல்லை. ரட்சைய தெருவில் குளோரி என்பவரின் வீடு உள்ளது என்றும் அந்த தெருவில் தான் 64 மீட்டர் சிமெண்ட் சாலை போட்டுள்ளனர் என்றால் சரியல்ல. பிப்ரவரி 2012 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு 26.07.2012 அன்று பணிகள் துவங்கப்பட்டு செப்டம்பர் 2012 அன்று பணி முடிக்கப்பட்டதாக போலியான விவரங்கள் அளவு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் சொல்வது போல் அது போலியான பதிவு அல்ல என்றும் அந்த தெருவில் குளோரி வீட்டிற்கு எதிரில் 64 மீட்டருக்கு சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது என்றும் அதற்கான பதிவு தான் அந்த ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ. 21 ஆவணத்தில் தீர்மான எண்.89 தேதி 10.09.2012 அன்று குண்டபள்ளி கிராமத்தில் ரட்சைய பகுதியில் போட வேண்டிய சிமெண்ட் சாலை அத்தெரு மிகவும் பள்ளமாக உள்ளதால் சிமெண்ட் சாலை அமைத்தால் மழை நீர் வீடுகளுக்கு புகுந்துவிடும் என்று கூறியதால் அப்பணியை மேட்டு பகுதியில் உள்ள குளோரி தெருவில் சிமெண்ட் சாலை போடவும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அளவு

புத்தகத்தில் 12.09.2012 அன்று ரூ.1,31,200/- க்கான இறுதி பணிகள் முடிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த தெருவில் பள்ளமாக இருந்த இடத்தை விட்டுவிட்டு குளோரி வீடு உள்ள ரட்சைய தெருவில் மேடான பகுதியில் சிமெண்ட் சாலை போடப்பட்டது என்றால் சரியல்ல. குளோரி தெருவே அந்த ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ. 22 ஆவணத்தில் scheme head- என்ன என்றால் Providing New Borewell and Mini Power Pump, Motor at Kokkalur and Syntex Tank also என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது திட்டத்தின் பெயர் அல்ல வேலையின் பெயர்.

அந்த Mini Power Pump என்பது அந்த இடத்தில் மேடை கட்டி அதில் சின்டெக்ஸ் மட்டும் வைப்பது என்றால் சரியல்ல. கோயில் தெருவில் மற்றொரு போர்வெல் உள்ளது என்று சொல்வது தவறு என்றும் ரோஜாபாய் வீட்டிற்கு எதிரே உள்ள ஒரே ஒரு போர்வெல் என்றால் சரியல்ல.

கை பம்பு பொறுத்தவரையில் 80 லிருந்து 90 அடி ஆழம் தான் போடுவார்கள் என்றும் கை பம்பு பொறுத்தவரையில் 60 அடி ஆழம் வரை தான் போட முடியும் என்றும் அதற்கு மேல் போட முடியாது என்றால் சரியல்ல. அது உங்களுடைய அனுமானம்.

நான் சொல்லும் போர்வெல்லின் ஆழம் எவ்வளவு என்றால் புலன் விசாரணையில் 84 மீட்டர் என்று தெரியவந்தது. அதற்கு முன்னர் 83

அடி தான் இருந்தது என்றால் சரியல்ல. குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து வந்தவர்கள் அளந்ததில் 24.90 மீட்டர் அளவிலேயே தண்ணீர் உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு இருக்கையில் மரத்துண்டு இருக்க வாய்ப்பில்லை அது நீரில் மிதக்கத்தான் வாய்ப்புண்டு.

இந்த வழக்கில் போர்வெல் முறைபடி போடப்பட்டுள்ளது என்றும் சிமெண்ட் சாலையும் முறைபடி போடப்பட்டது என்றும் நான் சரியாக விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.14 17:36:00 +0530